திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த வல்லுநர் குழு அமைக்கப் பட்டப் பிறகு அவர்களால் ஆராயப்பட்டு, ஊழல், மோசடி போன்றவை எவ்வளவு கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஊழல் மோசடி எதுவும் இல்லை. வாடகை வசூல் செய்வதில்தான் கால தாமதம் ஏற்படுகிறது. பாதைகள் போடுவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவைகளை தவிர்ப்பதற்காக எப்படி வேகமாகச் செயல்படலாம் என்பதில் கவனம் செலுத்துவதற்காக இந்த குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அது தவிர ஊழல், மோசடி இருப் பதாக எனக்குத் தகவல் இல்லை.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவரவர்களே, சிமெண்ட் பற்றாக் குறை இருப்பதினால் வீட்டுவசதி வாரியத்தில் கட்டப்படும் வீடுகள் சுண்ணாம்புக் கல்லினால் கட்டப்படுகிறது என்று சொல்லப் படுகிறது. அப்படியானால் ஏராளமாகத் தேவைப்படுகிற சுண்ணாம்பு எங்கிருந்து வாங்கப்படுகிறது என்பதைத் தெரிவிப் பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தமிழ்நாடு பூராவும் சுண்ணாம்பு கிடைக்கிறது. ஆகவே, தேவைப்படுகின்ற அளவுக்கு ஆங்காங்கே இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

Industrial Health and Hygiene Unit

* 22 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to set up an Industrial Health and Hygiene Unit for workers; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) மாநிலத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில், மருத்துவ அதிகாரி ஒருவர், இரசாயன வல்லுநர் ஒருவர், ஆய்வுக் கூட ஆய்வாளர் இருவர் ஆகியோருடன் தொழிற்சாலைச் சுகா தாரம்-துப்புரவுப் பிரிவு மற்றும் ஆய்வுக்கூடம் ஆகியவை இணைந்த ஓர் அமைப்பை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தொழில் முறையில் ஈடுபடும் தொழிலாளர்களைப் பாதிக்கக் கூடிய

1974 ஆகஸ்ட் 12]

ஆபத்துக்களைக் கண்டறிந்து ஆய்வு செய்வதற்காகவும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கான தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிக் கருத்து தெரிவிக்கவும் இப்பிரிவு ஏற்படுத்தப்படுகிறது. ஆய்வுக்கூடத்திற்குத் தேவையான முக்கிய வகையைச் சேர்ந்த கருவிகளை வெளி நாட்டிலிருந்து வாங்குவதற்கான அனுமதியைப் பெற இவ்வரசு புதுடில்லி, இந்திய அரசின் தொழில் நுட்ப மேம்பாட்டுத் தலைமை இயக்குநருடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறது. மருத்துவ ஆய்வாளர் பதவிக்குப் பொருத்தமான ஒரு நபரை நியமிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், தொழிலாளர்களுக்கு ஏற்படக் கூடிய லெட் பாய்சன், டி.பி. போன்ற நோய்கள் அவர்களை அணுகாமல் இருப்பதற்கு ஏதாவது வகை செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, சுகாதாரம், துப்புரவுப் பணிகளைச் செயல்படுத்துவது பற்றி ஆராயவும், ஆங்காங்கு தொழிலாளர்களுக்கு விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பது பற்றி ஆராய்ச்சி செய்வதற்கும் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மருத்துவ அதிகாரி ஒருவரை இக்குழுவில் நியமிக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது. சில இயந்திரங்கள் வெளிநாட்டிலிருந்து வாங்குவதற்குக் காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மற்றுள்ள விபரங்களுக்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தக் குழுவானது தற்காலிகமாக சிபாரிசுகளை மட்டும் வழங்க போடப்பட்டிருக்கிறதா அல்லது நிரந்தரமானதா? இந்தக் குழுவுக்கு தன்னிச்சையாக தன்னுடைய கருத்துக்களை அமுல்படுத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது நிரந்தரமாகப் பணி செய்யும் குழுதான். தகுந்த அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இது நிரந்தரமாக இருக்கக்கூடிய ஒரு குழுவாக இருப்பதால், அதற்கு ஏற்படக் கூடிய நிர்வாகச் செலவுகளுக்கு தொழில் ஸ்தாபனங்கள் பங்கு தரவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட கருத்து எதுவும் இல்லை.

Extraction of fish oil

* 23 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether industries are functioning in (i) Private and (ii) Public Sector for extracting fish oil in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தமிழ்நாட்டில் மீன் எண்ணெய் எடுப்பதற்கான தனியார் தொழிற்சாலைகள் எதுவும் செயல்பட்டு வரவில்லை. கடலூர், அதிராமபட்டினம், அம்மாபட்டினம், பாம்பன், தூத்துக்குடி, புன்னக்காயல், பெரிய தாழை போன்ற இடங்களில் பொதுத் துறையில் அரசுத் துறை யைச் சேர்ந்த சுறா மீன் எண்ணெய் ஆலைகள் சில உள்ளன. இந்த இடங்களில் சுறாமீன்களின் ஈரலிலிருந்து சுறா மீன் எண்ணெய் (பக்குவப்படுத்தாதது) எடுக்கப்படுகிறது. வைட்டமின் ஏ, டி, செறிந்த பக்குவப்படுத்தாத சுறாமீன் எண்ணெய் கள்ளிக் கோட்டையிலுள்ள, கேரளா சோப்பு, எண்ணெய் நிறுவனத்திற்கு விற்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, மருத்துவ உபயோகம் உள்ள இந்த மீன் எண்ணெய் சாதாரண மக்களுக்கும் குறைந்த விலையில் கிடைப்பதற்கு ஏற்ப பல இடங்களில் பப்ளிக் செக்டார் மூலம் தேவையான தொழிற்சாலைகளை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, அரசாங்கத்தில் ஏற்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் இப் போது இல்லை.